ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து**
**பராபவ ஆண்டு ஆனி திங்கள் பௌர்ணமி பூஜை விழா குறித்தும்**
**ஓங்காரக்குடில் செயல்பாடுகள் நிர்வாகம் குறித்தும்**
**தொண்டர் பெருமக்கள் நலம் குறித்தும் இனிதே**
**அரங்கன் யானும் அருளாசி தன்னை அருளுவேன்**
**ஆசான் அரங்கமகா ஞானியரின் முழுமதி அருளாசி நூல்**

29.06.2026

1. ஆனந்த நடனமிட்ட ஈசன் பாதம்
அடிவணங்கி அருளாசி தன்னை அரங்கன் யானும்
வரமாக பராபவ ஆண்டு ஆனி திங்கள்
முழுமதி நன்னாளில் ஆசி தனை

2. அன்பர்கள் மனம் மகிழவும்
ஓங்காரக்குடிலின் தர்மம் சிறக்கவும்
குடில் நிர்வாகம் சிறக்க வேண்டியும்
உலகோர் நலம் குறித்தும் அரங்கன் யான் ஆசிதருவேன்

3. வகைபட இன்று ஓங்காரக்குடில் விழா
ஆறுமுகப்பெருமான் தலைமையிலும்
அரங்கன் என் பரிபூரண அனுகூல
ஆசியோடும் சிறப்பாக நடந்து வர

4. வருகின்ற அன்பர்கட்கெல்லாம்
அரங்கன் யான் ஜோதிரூபில் ஆசிதந்து
அற்புதம் நடத்தி வருகின்றேன்
குடிலின் அருளமுது ஞானியர்களும்

5. சூட்சுமமாய் உண்டு மகிழ்ந்தனர்
அருமருந்தாக அதற்கு சக்தியூட்டி
வரும் அன்பர்களெல்லாம்
அவரவர் வேண்டுதல்கள் வெற்றி கொள்ளும் வண்ணம்

6. அரங்கன் யான் அற்புதம் நடத்துகின்றேன்
அய்யமற ஓங்காரக்குடிலின் நிர்வாகம் சிறப்பு
தொண்டர் பெருமக்களின் தொண்டும் சிறப்பு
வகைபட இன்னும் தர்மப்பணி சிறக்கவும்

7. அன்னதானத்துக்கு தேவையான
பொருளாதார பலம் பெருகவும்
வசூல் தொகைகள் சிறக்கவும்
அன்பர்களெல்லாம் மனமுவந்து

8. இயல்பாகவும் முழு சரணாகதியோடும்
முழு ஒத்துழைப்போடும் அவர்கள்
தொண்டாற்றவும் அரங்கன் யான்
அவர்கட்கு ஆக்கமும் ஊக்கமும்

9. தந்து அருள்புரிவேன் வல்லமைபட
உள்வெளி பணி என தொண்டாற்றும்
அனைவருக்கும் என் அனுகூலமும்
ஆசியும் பாதுகாப்பும் பரிபூரணமாய்

10. உண்டு உண்டு வகைபட
ஓங்காரக்குடிலில் இருந்து கிராமந்தோறும்
வெளி பணிகளுக்காக வெளிதடம்
அன்னதானத்துக்காக செல்லக்கூடிய

11. வாகனங்களுக்கும் அன்பர்களுக்கும்
தொண்டர் பெருமக்கட்கும்
சர்வ பாதுகாப்பு தந்து
அரங்கன் யான் அருள்புரிவேன்

12. இனிதே செல்லும் தடங்களிளெல்லாம்
அரங்கன் என் அருளமுதுக்கு
நல்ல வரவேற்பும் பாதுகாப்பும்
ஆங்காங்கே அவர்கள் ஒத்துழைப்பும்

13. பெருகவும் தர்மம் வளரவும்
இதற்குண்டான பொருளாதார பலம்
ஏற்படவும் அருள்புரிவேன்
இன்னும் எண்ணற்ற புது தொண்டர்களும்

14. உலகளாவிய வண்ணம் ஓங்காரக்குடிலின் புகழ்
பெருகி இனிதே அன்பர் பெருமக்கள்
அளவிலா வண்ணம் வந்து கலந்து
இந்த சேவை சிறக்கவும்

15. ஓங்காரக்குடிலின் புகழ் உலகறியவும்
அரங்கன் யான் அருள்புரிவேன்
சன்மார்க்க நெறிகளும் தானதர்ம வழிமுறைகளும்
அளவிலா வண்ணம் இன்னும்

16. எண்ணற்ற கிளைகள் பெருகி
அனைத்து கிளைகளுமே ஆக்கமோடு

சிறக்க அருள்புரிவேன்
அப்பனே தொண்டர் பெருமக்களெல்லாம்

17. மாதாந்திரம் அரங்கன் என்
குடில் நோக்கி முழுமதி காலம்
மட்டுமல்லாது பிற நாட்களில்
அனைத்து கிளைகளையும்

18. ஓங்காரக்குடிலின் நிர்வாகம்
அழைத்து அவர்கட்கு இன்னும்
ஆக்கம் பெருகுகின்ற வண்ணம்
இனிதே ஆலோசனையோடு கூடிய

19. அவர்கட்கு உண்டான நன்மதிப்புக்கான
வண்ணம் மேலும் செயல்பாடுகள்
பெருக்க இதன் மூலம்
இன்னும் கிளைகளெல்லாம்

20. விரிந்து சிறந்து ஓங்காரக்குடில் நோக்கி
அவர்களுடைய பங்களிப்பு பெருகி
இனிதே சிறக்க பரிபூரண ஆசியுண்டு
ஆசி தந்தேன் என் மக்கள்

21. பலபேர்கள் இன்னும் பொருளாதார
பலத்தில் மேல்நிலை வராத
சோடையில் இருப்பதாலே அவர்கட்கு
தனிப்பட்ட வகையிலும் அவரவர்கள்

22. இணையாக செய்கின்ற தொழில் வகையிலும்
அவர்கட்கு தொண்டு வழியிலுமே
நிலைகள் உயர்ந்து பொருளாதார பலம்
தேவைக்கு மேலாக பெருக இனிதே

23. வழிநடத்தி அரங்கன் யான்
அவர்களெல்லாம் மகிழவும்
சிறப்புற பங்காற்றவும் எதிர்காலத்தில்
அவர்கட்கு உண்டான

24. தேவைகளெல்லாம் பூர்த்தியாகவும்
அரங்கன் யான் பேரற்புதம் நிகழ்த்துவேன்
என் பலம் தொண்டர் பெருமக்கட்கு
எப்பொழுதும் உண்டு உண்டு

25. மிகைபட ஞானிகள் பூஜையிலும்
மேலான தர்மத்திலும் அரங்கன் யான்
கலந்து அருள் புரிவதாலே
எங்கு அரங்கன் பேரிலே

26. இனிதே உணவும் மக்களை நோக்கிய
தயவும் பெருகி நிற்கின்றதோ
அங்கெல்லாம் அரங்கன் யான் இறங்கி
அற்புதம் நடத்துவேன் இனிதே

27. இந்தவித நன்னாளில் நடந்து வருகின்ற
ஓங்காரக்குடிலின் பூஜையும் விழாவும் சிறப்பு
இங்கு ஞானிகளும் சூட்சுமமாய்
வந்து செல்வதாலே இந்த குடிலின் விழா

28. இன்னும் வருங்காலங்களிலும் பெருமளவில்
விரிவடைந்தும் இன்னும் மக்கள் படை பெருக இனிதே
தர்மத்தின் அளவு கூடவும்
இன்னும் அளவிலா வண்ணம்

29. எண்ணிக்கை கூடும்படி மூட்டைகள்
அன்னதானத்துக்கு உண்டான
தேவைகள் பெருக இனிதே
அதற்குண்டான பொருளாதார பலமும்

30. ஆட்கள் பலமும் நல்ல சரணாகதி
கொண்ட தொண்டர்கள் பலமும்
பெருக இந்த சேவை வளரவும் உயரவும்
அரங்கன் யான் அருள்புரிவேன்

31. அதுபோன்று நிர்வாகிகட்கும் தொண்டர் பெருமக்கட்கும்
மனபலமும் தேகபலமும் ஆரோக்கியபலமும்
கூட்டி அரங்கன் யான் காப்பேன்
அரங்கன் யான் அருளிய அருளாசி விளக்கம் முற்றும் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி